வழியில் இவ்வரசு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் மக்கள் கஜா புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற வட மாவட்ட மக்களெல்லாம், மழை இல்லாததால் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக சர்க்கரை, அரிசி உள்ளிட்ட பொங்கல் தொகுப்போடு, 1,000 ரூபாயைக் கொடுத்து அகமகிழ்ந்தவர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அந்த வரிசையில்தான், இன்றைக்கு விதி 110–ன்கீழ் உணவுத் துறைக்கு ரூ.164,24,55,000/– மதிப்பிலான பல்வேறு உன்னதமான அறிவிப்புகளை அறிவித்திருக்கின்ற அருமைக்குரிய அண்ணன், புயலையும் வென்று காட்டிய எங்கள் புன்னகைப் போராளி, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அருமைக்குரிய அண்ணன் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், உணவுத் துறையின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

பிற்பகல் 12–45

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு)

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் வேண்டாமென்று நீங்கள் சொல்லலாம். ஆனால், ஒரு சபையை நடத்துகின்ற சபாநாயகர், அந்தமாதிரி சொல்லமுடியாது. உறுப்பினர் ஒருவர் ஒரு கேள்வி கேட்டால் அரசின் சார்பில் அதற்குண்டான விளக்கத்தைத் தரவேண்டும். அதுதான் முறை. நீங்கள் திடீரென்று எழுந்து கேட்கிறீர்கள். Zero hour–ல் raise பண்ணவேண்டும் என்று கேட்கிறீர்கள். நீங்கள் நாளைக்கு கேள்வியைக் கேளுங்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுச் சொல்கிறேன். அதுதான் முறை, நீங்கள் இப்படிப் பேசுவது சரியில்லை.